**PROCEEDINGS OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/s.THE RAMCO CEMENT LIMITED LIMEKANKAR AND CLAY(OTHERS) QUARRY, MARAVARPERUNGUDI VILLAGE, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 15.12.2020 AT 11.00 A.M IN M/s.SATHYA MAHAL, 1/117A, ARUPPUKOTTAI -SAYALGUDI MAIN ROAD, M.REDDIAPATTI - 626 118, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | R. Kannan, I.A.S., | : | District Collector, Virudhunagar . |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar. |
| 3 | K.S. Murugesan | : | Revenue Divisional Officer, Aruppukottai |
| 4 | G.Gurusamy | : | Deputy Director, Department of Geology and Mining, Virudhunagar |
| 5 | P.Jayakumar | : | Deputy Superintendent of Police, Thiruchuli, Virudhunagar District. |
| 6 | Project Proponent and public | : | 193 Nos (List enclosed) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the District Collector, Virudhunagar, officials, all general public and project proponents who have attended the public hearing for the proposed mining project of M/s.The Ramco Cement Limited Limekankar And Clay(Others) Quarry, Maravarperungudi Village is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of

India. He added that the public notice informing the conducting of Public Hearing was published in "Dinamani" and " Indian Express" dated 07.11.2020. He informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

He also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography and the same will be sent to the Ministry of Environment, Forest and Climate Change/ State Environment Impact Assessment Authority.

The District Collector, Virudhunagar initiated the Public Hearing process. Further, the District Collector requested the project proponent to explain about their proposed project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thiru. N.Devaraja, Deputy General Manager, M/s.The Ramco Cement Limited welcomed everyone and briefed about the project proposal. Subsequently, he requested their environmental consultant to make presentation about the proposed project.

The Environmental consultant of the project has made presentation on the project to the public along with Environmental Management Plan.

The views of the Public attended the Public Hearing and the final reply by the project proponent on their concerns are detailed below.

**Thiru. Govindaraj, Suthamadam:**

He requested that land owners who have sold their land to M/s.The Ramco Cement Limited for quarrying operations shall be permitted to carryout agricultural activities till commencing the quarrying activities. He welcomed the project.

**Thiru.Balamurugan, President,Parent Teachers Association, Government High School , MaravarPerungudi**

He requested the Ramco management as follows.

To repair the school ground;

Financial support for upgradation of school to Higher Secondary School

Employment opportunities for local public

To permit the land owners who have sold land to M/s.The Ramco Cement Limited for quarrying operations to carryout agricultural activities till commencing the quarrying activities.

Finally welcomed the project

**Thiru. Krishnamoorthy, Salukkuvarpatti**

Land owners who have sold land to M/s.The Ramco Cement Limited for quarrying operations shall be permitted to carryout agricultural activities till commencing the quarrying activities. He welcomed the project

**Thiru. Subburaj, Pungamarathupatti**

Requested to desilt the water sources in the vicinity of the project

**Thiru. Nagalingam,Rtd VAO, MaravarPerungudi**

To permit the land owners who have sold land to M/s.The Ramco Cement Limited for quarrying operations to carry out the agricultural activities till commencing the quarrying activities.

**Thiru. A.Sermathurai, Social activist, MaravarPerungudi**

Villagers in the project area are moving outside for employment. So, he requested the project proponent to provide employment to the local public. Also, demanded to provide basic infrastructure facilities to the nearby villages.

**Thiru. Ramanathan, Ex. President, Suthamadam**

Requested to provide employment opportunity to local villagers and help local villagers in all aspects.

**Thiru. Kavundarayan, Suthamadam**

He objected establishment of quarrying activities in the agricultural areas. There will be noise and dust pollution problem from the quarrying activities. He stated that there is a possibility of sea water intrusion in the quarry area. Further, he stated that already there is a water problem in the proposed quarry area. Also, he wanted transportation facility in this area.

**Thiru. Muthuselvam, Vellaiyapuram**

He is an orphan. He wants help from M/s.The Ramco Cement Limited.

**Tmt. PandiErakkal, Vellaiyapuram**

M/s.The Ramco Cement Limited is helping for education in this area and welcomed the project.

**Thiru.Raju, Kanjampatti**

There is a water scarcity in this area and requested the project proponent to provide water supply in the vicinity of the project area. Also, he requested to remove the obstacles in the water courses leading to the Kanmoi and Eri in the vicinity of the project area.

**Thiru. Perumal, Salukkuvarpatti**

Requested to provide employment opportunity to local villagers. Also requested to permit the land owners who have sold land to M/s.The Ramco Cement Limited for quarrying operations to carryout agricultural activities till commencing the quarrying activities.

**Thiru. Senthilkumr, Maravarperungudi**

The project proponent has built buildings for the Mariyamman temple and school in Maravarperungudi. They are supplying drinking water. Requested to provide employment opportunity to local villagers. Also requested to permit the land owners who have sold land to M/s.The Ramco Cement Limited for quarrying operations to carryout agricultural activities till commencing the quarrying activities. Also, demanded for resale of land after quarrying operations to the land owners who have already sold the land. Also, requested the project proponent to develop greenbelt in the area.

**Thiru. Sivakumar, District Panchayat Member, M.Reddiyapatti**

The welfare measures at present by the management is not enough. The project proponent shall provide employment to each house in the nearby villages. Also requested to permit the land owners who have sold land to M/s.The Ramco Cement Limited for quarrying operations to carryout agricultural activities till commencing the quarrying activities Also, requested to remove the obstacles in the watercourses leading to the Kanmoi and Eri in the

vicinity. Demanded adopting of a village by the project proponent to provide infrastructure facilities.

**Thiru. R.Sivakumar, R.S.S,Thiruchuli Union, M.Reddiyapatti**

Welcomed the project. Needs more industries in this for the development. The industrial development will facilitate more employment. He wanted an Arts and Science College in this area for educational development.

**Tmt. R.Murugalakshmi,Headmistress,Primary School, MaravarPerungudi**

The project proponent already providing Notes and books to the students and welcomed the project.

**Tmt. Kosalai, Headmistress,Primary School, Suthamadam.**

The project proponent already providing all helps to students. They are conducting medical camp and involved in greenbelt development activities in the school. Providing scholarship to students. Further, she requested to help for higher education to the local students and assistance for orphan students.

**Thiru. Pavunraj, MaravarPerungudi**

Requested to remove juliflora trees in this area.

**Thiru. Ramamoorthy, Pungamarathupatti**

The project proponent is already providing all help to local public

**Thiru. Velusamy, Suthamadam**

The project proponents are registering the land without patta owners. They shall acquire land for quarrying activities mainitaing safety distance from the habitations

**Thiru. Marichamy, Suthamadam**

The project proponent shall maintain safety distance from the habitations to carry out quarry operations. Kanjampatti Kanmoi to be rehabilitated and transport service to be resumed in this area. The proposed quarrying activity shall not affect the water courses leading to Kanmoi, Kulam etc. Drinking water problem in the area shall be solved. Land shall be acquired from the proper patta owner. The proponents shall provide help for general cause.

**Thiru. Muthuraj, MaravarPerungudi**

The proponents are purchasing land at lower rate. They shall give an assurance to return back the land at lower rate after quarrying is completed. Water courses in the vicinity shall not be affected. The proponents are selling the juliflora without proper permission. The Public's livelihood is affected because of quarrying activities. The proponents shall provide employment properly to every family in the nearby villages.

**Thiru. Santhanam, MaravarPerungudi**

He stated that he is surviving because of Ramco Industry. They are providing employment. They have developed greenbelt in this area. Some people are deliberately objecting the project. The proponents are doing welfare measures. They are already providing medical facilities to the local public. The nearby villagers are getting benefit from the proponents. He welcomed the project.

**Thiru. R.Ayothiraman, MaravarPerungudi**

The water courses are already affected because of the proponent's existing mining activities. Cart tracks in the area have been affected. Ground water in the area is depleted. This proposed project will affect the livelihood of the local public. The proponents are

registering land without patta owner. They are not doing any facility to the local public. The proponents have not done anything to MaravarPerungudi village

**Thiru. Selvarai,Vellaiyapuram**

They are providing all help to the local public. The proponets shall acquire land maintaining safety distance from the habitations to carryout quarry operations.

**Thiru. Velusamy.Kanjampatti**

They are providing all help to the local public.

**Thiru. Ramalingam, Senior Vice President, M/s.Ramco Cements limited**

He thanked everyone for attending this meeting and offering suggestions. Further, he stated that they have well taken the suggestions of the public. He assured to provide all help to the local public and follow the suggestions made by them.

After this, since no one came forward to give opinion/view on the project, the District Collector has invited the public to offer their further more views if any. Even after that, there was no further response from the public. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and concluded the public hearing with vote of thanks.

List of public attended the public hearing along with recorded video (CD) of the entire proceedings, suggestions and copy of petitions received about the project are enclosed herewith.

District Environmental Engineer,
TamilNadu Pollution Control Board,
Virudhunagar.

District Collector,
Virudhunagar.

**திரு.எ.தி ராம்கோ சிமிண்ட் லிமிடெட் சுண்ணாம்பு மற்றும் களிமண்(மற்றவை)குவாரி, மறவர்பெருங்குடி கிராமம், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டத்தில் தொடங்கவுள்ள சுரங்கத்திட்டம் தொடர்பாக 15.12.2020 முற்பகல் 11.00 மணியளவில் திரு.எ.சத்யா மகால், 1/117A, அருப்புக்கோட்டை-சாயல்குடி மெயின்ரோடு, எம்.ரெட்டியாபட்டி, அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்.**

பங்கேற்றோர்:

திருவாளர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1 | இரா.கண்ணன், இ.ஆ.ப. | : | மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | கே.எஸ்.முருகன் | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>அருப்புக்கோட்டை |
| 4 | கு. குருசாமி | : | துணை இயக்குனர்,<br>புவியியல் மற்றும் கனிம வளத்துறை,<br>விருதுநகர். |
| 5 | பி.ஜெயக்குமார் | : | துணை காவல் கண்காணிப்பாளர்,<br>திருச்சுழி, விருதுநகர் மாவட்டம். |
| 6 | தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | : | 193 எண்கள்<br>(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

திரு.எ. தி ராம்கோ சிமிண்ட் லிமிடெட் சுண்ணாம்பு மற்றும் களிமண் (மற்றவை) குவாரி மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர், அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் விபரம் ஏற்கனவே

"தினமணி" மற்றும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 07.11.2020 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதிகள் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்கள் மற்றும் அது தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதிகளின் பதில் ஆகியன வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள் உடன் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம்/ மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

பின்பு, மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்கள் பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தை தொடங்கி வைத்தார். மேலும், இத்திட்டத்தின் பிரதிநிதிகளை இத்திட்டம் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறி, இத்திட்டம் தொடர்பான சந்தேகங்களையும், விளக்கங்களையும் கேட்குமாறு பொது மக்களை கேட்டுக் கொண்டார்.

பின்பு தி ராம்கோ சிமிண்ட் லிமிடெட் துணை பொது மேலாளர் திரு.N.தேவராஜா வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று, தங்களது சுற்றுச்சூழல் ஆலோசகர் இத்திட்டம் தொடர்பாக தொடர்ந்து விளக்கவுரை ஆற்றுவார் என்று கூறினார். இதன்பிறகு சுற்றுச்சூழல் ஆலோசகர் இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

அதன்பின்பு, இக்கூட்டத்தில் பொதுமக்களின் ஆலோசனைகள், கருத்துக்கள், சந்தேகங்கள் மற்றும் அது தொடர்பாக இத்திட்டத்தின் பிரதிநிதி அளித்த விபரங்கள் பின்வருமாறு.

**திரு.கோவிந்தராஜ், சுத்தமடம்**

ராம்கோ சிமிண்ட் நிறுவனம் சுரங்கத் தொழிலுக்காக கையகப்படுத்திய இடத்தினை, அந்நிலத்தை விற்பனை செய்தவருக்கே சுரங்கத்தொழில் தொடங்கும்வரை விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்கவேண்டும். மேலும், அவர் இத்திட்டத்தினை வரவேற்றார்.

**திரு.பாலமுருகன், தலைவர், பெற்றோர் ஆசிரியர் சங்கம், அரசு உயர்நிலைப்பள்ளி, மறவர்பெருங்குடி**

ராம்கோ நிர்வாகம் கீழ்க்கண்ட தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டினார்.

- பள்ளியில் விளையாட்டு மைதானத்தை சீரமைக்க வேண்டும்.
- பள்ளி மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த நிதி உதவி செய்ய வேண்டும்.
- உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும்.
- ராம்கோ சிமிண்ட் நிறுவனம் சுரங்கத் தொழிலுக்காக கையகப்படுத்திய இடத்தினை அந்நிலத்தை விற்பனை செய்தவருக்கே சுரங்கத்தொழில் தொடங்கும்வரை விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்கவேண்டும்.

**திரு.கிருஷ்ணமூர்த்தி, சலுக்குவார்பட்டி**

ராம்கோ சிமிண்ட் நிறுவனம் சுரங்கத் தொழிலுக்காக கையகப்படுத்திய இடத்தினை, அந்நிலத்தை விற்பனை செய்தவருக்கே சுரங்கத்தொழில் தொடங்கும்வரை விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்கவேண்டும். மேலும், அவர் இத்திட்டத்தினை வரவேற்றார்.

**திரு.சுப்புராஜ், புங்கமரத்துப்பட்டி**

இப்பகுதியில் உள்ள நீர் ஆதாரங்களை தூர்வார வேண்டும்.

திரு.நாகலிங்கம், கிராம் நிர்வாக அலுவலர் (ஓய்வு), மறவர்பெருங்குடி

ராம்கோ சிமிண்ட் நிறுவனம் சுரங்கத் தொழிலுக்காக கையகப்படுத்திய இடத்தினை, அந்நிலத்தை விற்பனை செய்தவருக்கே சுரங்கத்தொழில் தொடங்கும்வரை விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்கவேண்டும்.

திரு.A. சேர்மதுரை, சமூக ஆர்வலர், மறவர்பெருங்குடி

திட்டம் தொடங்கப்படவுள்ள பகுதியிலுள்ள கிராமங்களிலிருந்து மக்கள் வேலை வாய்ப்பிற்க்காக வெளியூர் செல்கின்றனர். எனவே உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை தரவேண்டும். மேலும் இப்பகுதியில் உள்ள கிராமங்களுக்கு அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை செய்து தர வலியுறுத்தினார்.

திரு.ராமநாதன், முன்னாள் பஞ்சாயத்து தலைவர், சுத்தமடம்

உள்ளூர் மக்களுக்கு வேலை வாயப்பு வழங்க வேண்டும் மற்றும் அவர்களுக்கு அனைத்து வகையிலும் உதவ வேண்டும்.

திரு.கவுண்டராயன், சுத்தமடம்

விவசாய நிலங்களில் சுரங்கத்தொழில் நிறுவுவதை எதிர்த்தார். சுரங்கப்பணியிலிருந்து ஒலி மற்றும் தூசு மாசு ஏற்படும் என்றார். சுரங்கப் பகுதியில் கடல் நீர் உட்புக வாய்ப்பு இருக்கும் என்றும் கூறினார். மேலும், இப்பகுதியில் ஏற்கனவே நீர் தடுப்பாடு இருப்பதாக கூறினார். இப்பகுதிக்கு போக்குவரத்து வசதி செய்து தர வேண்டினார்.

திரு.முத்துச்செல்வம், வெள்ளையாபுரம்

தான் ஒரு அனாதை என்று கூறி தனக்கு நிறுவனம் உதவி செய்ய வேண்டும் என்று வேண்டினார்.

திருமதி.பாண்டிஎரக்காள், வெள்ளையாபுரம்

ராம்கோ சிமிண்ட் நிறுவனம் படிப்பு வசதிக்கு உதவி செய்வதாக கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

திரு.ராஜு, கஞ்சம்பட்டி

இப்பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு இருப்பதாகவும் அதனை நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். மேலும் நீர்வரத்து கால்வாய்களை சுத்தப்படுத்தி அதில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இருந்தால் அதனை அகற்றி அப்பகுதியில் உள்ள கண்மாய் மற்றும் ஏரிகளில் நீர் நிரம்ப தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

திரு.பெருமாள், சலுக்குவார்பட்டி

உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்று கூறினார். ராம்கோ சிமிண்ட் நிறுவனம் சுரங்கத் தொழிலுக்காக கையகப்படுத்திய இடத்தினை, அந்நிலத்தை விற்பனை செய்தவருக்கே சுரங்கத்தொழில் தொடங்கும்வரை விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்கவேண்டும்.

திரு.செந்தில்குமார், மறவர்பெருங்குடி

ராம்கோ சிமிண்ட் நிறுவனம், மறவர்பெருங்குடியில் உள்ள மாரியம்மன் கோவில் மற்றும் பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடஙக்ளை கட்டித்தந்துள்ளனர். அப்பகுதியில் குடிநீர் வசதி செய்து தருகின்றனர். உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்று வேண்டினார். ராம்கோ சிமிண்ட் நிறுவனம் சுரங்கத் தொழிலுக்காக கையகப்படுத்திய இடத்தினை, அந்நிலத்தை விற்பனை செய்தவருக்கே சுரங்கத்தொழில் தொடங்கும்வரை விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்கவேண்டும். மேலும் சுரங்கப்பணி முடிந்தவுடன் நிலம் விற்பனை செய்தவருக்கே, மீண்டும் குறைந்த விலையில் நிலத்தை திருப்பி தரவேண்டும் என்றார் மற்றும் இப்பகுதியில் பசுமை வளையத்தை உருவாக்க கேட்டுக்கொண்டார்.

திரு.சிவக்குமார், மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர், எம்.ரெட்டியாபட்டி

ராம்கோ நிர்வாகம் தற்சமயம் வழங்கும் நலத்திட்ட உதவிகள் போதுமானதல்ல. அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேலை வாயப்பளிக்கவேண்டும். ராம்கோ சிமிண்ட் நிறுவனம் சுரங்கத் தொழிலுக்காக கையகப்படுத்திய இடத்தினை, அந்நிலத்தை விற்பனை செய்தவருக்கே சுரங்கத்தொழில் தொடங்கும்வரை

விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்கவேண்டும். மேலும், நீர்வரத்து கால்வாய்களை சுத்தப்படுத்தி அதில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இருந்தால் அதனை அகற்றி அப்பகுதியில் உள்ள கண்மாய் மற்றும் ஏரிகளில் நீர் நிரம்ப தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். மேலும் அவர்கள் ஒரு கிராமத்தை தத்தெடுத்து அக்கிராமத்தில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை நன்றாக உருவாக்கவேண்டும்.

<u>திரு.R.சிவக்குமார், ஆர்.எஸ்.எஸ்.திருச்சுழி யூனியன், எம்.ரெட்டியாபட்டி</u>

அவர் இத்திட்டத்தினை வரவேற்றார். இப்பகுதி வளர்ச்சி பெற நிறைய தொழிற்சாலைகள் தேவை என்று கூறினார். தொழிற்சாலை பெருக்கம் வேலை வாய்ப்பை உருவாக்கும் என்று கூறினார். மேலும், இப்பகுதியில் கல்வி மேம்பாட்டிற்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை உருவாக்கவேண்டும் என்று கூறினார்.

<u>திருமதி.R.முருகலட்சுமி, தலைமை ஆசிரியை, ஆரம்ப பள்ளி, மறவர்பெருங்குடி</u>

திட்ட ஆதாரவாளர்கள் ஏற்கனவே மாணவர்களுக்கு நோட்டு மற்றும் புத்தங்களை வழங்குவதாக கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

<u>திருமதி.கோசலை, தலைமை ஆசிரியை, ஆரம்ப பள்ளி, சுத்தமடம்</u>

திட்ட ஆதாரவாளர்கள் ஏற்கனவே உதவி செய்கின்றார்கள். பள்ளிகளில் மருத்துவ முகாம்களை நடத்துகின்றார்கள். மேலும், பள்ளிகளில் பசுமை வளையம் உருவாக்க உதவுகின்றார்கள். மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குகின்றார்கள். இருந்தபோதிலும், மாணவர்களின் மேல்படிப்பிற்கு நிறுவனம் உதவ வேண்டும் என்றும் மற்றும் ஆதரவற்ற அனாதை குழந்தைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

<u>திரு. பவுன்ராஜ், மறவர்பெருங்குடி</u>

இப்பகுதியில் சீமைக்கருவேல் மரங்களை அகற்ற நிறுவனம் உதவி செய்ய வேண்டும் என்று கூறினார்.

<u>திரு.ராமமூர்த்தி, புங்கமரத்துப்பட்டி</u>

இந்நிறுவனம் உள்ளூர் மக்களுக்கு ஏற்கனவே பல உதவிகளை செய்து வருகின்றது என்று கூறினார்.

திரு.வேலுச்சாமி, சுத்தமடம்

இந்நிறுவனம் நில பட்டா உரிமையாளர்கள் இல்லாமல் பத்திரப்பதிவு செய்து நிலத்தை கையப்படுத்துகின்றனர் என்று கூறினார். மேலும் நிறுவனம் குடியிருப்பு பகுதியிலிருந்து பாதுகாப்பான இடைவெளி விட்டு நிலத்தை குவாரி தொழிலுக்கு கையகப்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

திரு.மாரிச்சாமி, சுத்தமடம்

நிறுவனம், குடியிருப்பு பகுதியிலிருந்து பாதுகாப்பான இடைவெளி விட்டு நிலத்தை குவாரி தொழிலுக்கு கையகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கஞ்சம்பட்டி கிராமத்தில் கண்மாயை மராமத்து செய்யவேண்டும் என்றும், இப்பகுதிக்கு போக்குவரத்தை துவக்கவேண்டும் என்று கூறினார். மேலும் குவாரிப்பணிகளினால் கண்மாய் மற்றும் குளங்களுக்குச் செல்லும் நீர்வரத்துக் கால்வாய்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்று கூறினார். இப்பகுதியில் குடிநீர் பிரச்சனையை சரி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இந்நிறுவனம், நில பட்டா வைத்திருக்கும் முறையான உரிமையாளர்களிடம் மட்டுமே பத்திரப்பதிவு செய்து நிலத்தை கையகப்படுத்த வேண்டும் என்று கூறினார். மேலும் நிறுவனம் இப்பகுதிக்கு எல்லா வகையிலும் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு.முத்துராஜ், மறவர்பெருங்குடி

நிறுவனம் குறைந்த விலையில் நிலங்களை கையகப்படுத்துகின்றனர் என்றார். மேலும், குவாரி தொழில் முடிந்த பின் அந்நிலத்தினை குறைந்த விலையில் திருப்பி தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும், குவாரிப்பணிகளினால் கண்மாய் மற்றும் குளங்களுக்குச் செல்லும் நீர்வரத்துக் கால்வாய்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்று கூறினார். நிறுவனம், சீமைக்கருவேல் மரத்தினை எந்த அனுமதியும் இல்லாமல் விற்பனை செய்கின்றனர் என்றார். மக்களின் வாழ்வாதாரம் குவாரி தொழிலினால் பாதிப்படைவதாகக் கூறினார். நிறுவனம், ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேலை வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு.சந்தானம், மறவர்பெருங்குடி

ராம்கோ நிறுவனம் இருப்பதால் மட்டுமே தாம் உயிரோடு இருப்பதாகக் கூறினார். அவர்கள், அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கின்றனர். மற்றும் மரங்களை நட்டு பசுமை வளையம் ஏற்படுத்துகின்றனர். சிலர் வேண்டுமென்றே திட்டத்தை எதிர்க்கின்றனர். இந்நிறுவனம் பொதுமக்களுக்கு பல நலத்திட்டங்களை வழங்குகின்றது. உள்ளூர் மக்களுக்கு நல திட்ட வசதிகளை செய்து தருகின்றது. அருகில் உள்ள கிராமத்து மக்கள் இந்நிறுவனத்தால் பயனடைகின்றனர்.

திரு.R.அயோத்திராமன், மறவர்பெருங்குடி

நிறுவனத்தின் ஏற்கனவே இயங்கும் குவாரிகளால் நீர் ஆதாரங்களுக்கு செல்லும் நீர்வழித்தடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மாட்டு வண்டித்தடங்கள் அழிந்து விட்டன. நிலத்தடி நீர் குறைந்து விட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டால் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். நில பட்டா உரிமையாளர்களின் அனுமதியில்லாமல் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. உள்ளூர் மக்களுக்கு எந்த வசதியும் செய்து கொடுக்கவில்லை. மறவர்பெருங்குடி கிராமத்திற்கு எதுவும் செய்யவில்லை.

திரு.செல்வராஜ், வெள்ளையாபுரம்

உள்ளூர் மக்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கின்றனர். நிறுவனம் பாதுகாப்பு இடைவெளி விட்டு குவாரி தொழிலுக்கு நிலத்தை கையகப்படுத்தவேண்டும்.

திரு.வேலுச்சாமி, கஞ்சம்பட்டி

உள்ளூர் மக்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தருகின்றனர்.

திரு.ராமலிங்கம், மூத்த துணைத்தலைவர், ராம்கோ சிமிண்ட் லிமிடெட்

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறினார். மக்களின் கருத்துகளும் மற்றும் ஆலோசனைகளும் நல்ல விதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதாகக் கூறினார். மேலும், உள்ளூர் மக்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்வதாக கூறி அவர்களின்

ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் கடைபிடிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பான கருத்துக்கூற யாரும் முன்வராததால், மேலும் கருத்துக்களை தெரிவிக்க மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்கள் கேட்டுக்கொண்டார். இதன் பின்பும் யாரும் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. இறுதியில், கூட்டத்தில் இதுவரை நடந்த நடவடிக்கைகளை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் தொகுத்துக் கூறி, கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ குறுந்தகடு மற்றும் இத்திட்டம் தொடர்பாக நேரடியாக பெறப்பட்ட மனுக்களின் நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர்.